துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பராமரிப்பற்ற சாலைகளுக்கு

சுங்கக் கட்டணம் வசூலிப்பது முறையல்ல!

சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையை மேற்கோள் காட்டி ஒன்றிய அமைச்சருக்கு தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

சென்னை, அக்.4-

சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளாலும், குண்டும் குழியுமாக உள்ள சாலைகளினாலும் பொதுமக்கள் சந்திக்கும் இன்னல்கள் குறித்தும், இப்படி பராமரிப்பற்றச் சாலைகளுக்குச் சுங்கக் கட்டணம் வசூலிப்பது முறையல்ல என்பதனை வலியுறுத்தியும், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களுக்கு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதம் வருமாறு:-

சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் மோசமான நிலை குறித்து கடந்த பிப்ரவரி 9, 2023 அன்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுக் கேள்வி எழுப்பியதோடு, பல்வேறு தருணங்களில் இப்பிரச்சினைக் குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். இருந்த போதிலும் அந்த தேசிய நெடுஞ்சாலை தற்போது வரை குண்டும், குழியுமாகவும், அதில் தொடர்ந்து சாலை பணிகள் நடந்து வருவதாலும், பொதுமக்களும், பயணிகளும் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

மேலும் சமீபத்தில் அந்த வழியில் நான் பயணம் செய்தபோதும் அந்த தேசிய நெடுஞ்சாலையின் மோசமான நிலையைக் கண்டும், பயணிகள் சிரமப்படுவதைக் கண்டும் வருத்தமடைந்தேன்.

இந்த தேசிய நெடுஞ்சாலையின் மோசமான நிலையைக் குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் உங்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், அந்த சாலையின் மோசமான நிலையினால்தான், சமீபத்தில் பல மாவட்டங்களுக்குத் தான், ரயிலில் பயணம் செய்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். இந்த சாலையானது சென்னை மற்றும் அதன் துறைமுகங்களில் இருந்து காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளை இணைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

சென்னையில் இருந்து இந்தத் தொழில்துறை மையங்களுக்கு சரக்கு மற்றும் சேவைகளை சிரமமின்றி கொண்டு செல்வதற்கு இந்த NH 48 அவசியமானது என்பது உங்களுக்குத் தெரியும். இருந்த போதிலும் போதியப் பராமரிப்பு இல்லாமல், கட்டுமானப் பணிகளில் ஏற்பட்டுவரும் காலதாமதத்தால் பொதுமக்கள் கடும் சிரமத்தை சந்திப்பதோடு, தொழில்துறை போக்குவரத்தும் பெரும் நெருக்கடியை சந்திக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்குத் தேவையான நிலம் பெற்றுத் தருதல், வனத்துறையின் அனுமதி, வரி விலக்கு போன்ற அனைத்து வசதிகளை வழங்கிய நிலையிலும், ஸ்ரீபெரும்புதூர் - வாலாஜாப்பேட்டை ஆறு வழிச்சாலைப் பணிகளின் கால தாமதத்தினால் அங்கேயும் மோசமான நிலையே நீடிக்கிறது. இது பொதுமக்களிடையே தேசிய நெடுஞ்சாலைத்துறைமீது வெறுப்பை ஏற்படுத்தி வருகிறது.

இப்படிப்பட்ட மோசமான சாலைகளுக்குத் தொடர்ந்து சுங்கக் கட்டணம் வசூலிப்பது நியாயமற்றது. வழங்கப்படாதச் சேவைக்கு பொதுமக்கள் வரி செலுத்தி வருகின்றனர். முறையாகப் பராமரிக்கப்படும் சாலைகளுக்குத்தான் சுங்கக் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமே தவிர, இப்படி குண்டும் குழியுமாக இருக்கும் சாலைகளுக்குக் கட்டணம் வசூலிப்பது ஏற்கத்தக்கது அல்ல.

இந்த தேசிய நெடுஞ்சாலையில் (NH 48) நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிப்பதையும், சாலைகள் விரைந்து சீரமைக்கப்படுவதையும் உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த சாலையைச் சீரமைத்து, பாதுகாப்பானப் பயணத்திற்கு தயாராகும் வரை, இந்தப் பராமரிப்பற்றச் சாலையினால் சிரமப்பட்டுப் பயணம் செய்யும் பொதுமக்களிடம் சுங்கக் கட்டணம் வசூலிப்பதையும் நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் நீங்கள் கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு தனது கடிதத்தில் தயாநிதி மாறன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் கரூர், விருதுநகர், செங்கல்பட்டு உள்ளிட்ட

14 மருத்துவக் கல்லூரிகளுக்கு முதல்வர்கள் நியமனம் ! தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, அக. 4 -

சுகாதாரத் துறை செயலாளர் சுப்ரியா சாஹு வெளியிட்டுள்ள உத்தரவில், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் ஜி.சிவசங்கர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் பவானியும், ஈரோடு மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் ரவிக்குமாரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் அருள் சுந்தரேஷ் குமார், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் லியோ டேவிட், வேலூர் மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் ரோகிணி தேவி, கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் ராமலட்சுமி ஆகியோர் முதல்வராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் குமாரவேல், ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் அமுதாராணி, சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் தேவிமீனாள், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் கலைவாணி, தேனி அரசு மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் முத்துசித்ரா, கரூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் லோகநாயகி, விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வராக டாக்டர் ஜெயசிங் ஆகியோரை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்னை நந்தனம், ஆவின் இல்லத்தில் உள்ள சர்க்கரைத் துறை ஆணையர் அலுவலகத்தில் நேற்று (3.10.2024) சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தலைமையில் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, சர்க்கரைத் துறை ஆணையர் த. அன்பழகன், கூடுதல் சர்க்கரைத் துறை ஆணையர் (பொறுப்பு) பி. பாலமுருகன், அனைத்து கூட்டுறவு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் சர்க்கரைத் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (3.10.2024) சென்னை. ஆர்மினியன் தெரு. பின்னி மில் பார்க்கிங் வளாகத்தில் சென்னை கிழக்கு மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் தமிழர்களின் சுடர் திராவிடர் தொடர் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவில் 'செல்லும் இடம் தோறும் சீரானது! திராவிட மாடலின் பேரானது!!' என்ற தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு 8 புதிய ஆட்டோக்களையும், 800 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையற் தொகையுடன் கூடிய சீருடைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் , மண்டலக் குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு, திருமதி.சரிதா மகேஷ் குமார் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்;

துணை முதலமைச்சராக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலினை அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி!

மாவட்ட செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், அக்.04-

கழக இளைஞரணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது என்று செயற்குழு கூட்டத்தில், மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம், கலைஞர் பவளவிழா மாளிகையில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை மாவட்ட கழகசெயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம், எம்.பி., டி.வி.கோகுலகண்ணன், திருமதி.கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.நாராயணன், ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், மாநில தொண்டரணி ஜி.சுகுமாரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.சிகாமணி, பொன்.சசிக்குமார், மதுராந்தகம் நகர செயலாளர். கே.குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், பி.சேகர், க.குமணன், டி.குமார், பி.எம்.பாபு, பொன்.சிவக்குமார், சத்தியசாய், கே.கண்ணன், இ.சரவணன், ஏ.சிற்றரசு, தம்பு, காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள், எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் மாநகர நிர்வாகிகள், கே.ஏ.செங்குட்டுவன், எ.எஸ்.முத்துசெல்வம், கே.சுப்புராயன், பேரூர் செயலாளர்கள். என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், சுந்தரமூர்த்தி, மோகன்தாஸ், வி.எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், நாத்திகம் நாராஜன், வ.மலர்மன்னன், இ.அசோகன், ஏ.நூருல்அமீன், எஸ்.மாலதி, வ.வெங்கட்ராமன், ஏ.என்.பாரத், டி.ஜெய்க ணேஷ், சுந்தரவரதன், கே.ஏ.இளங்கோவன், கலைச்செல்வி ஜெகநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, க.பால்ராஜ், ஆண்டோ சிலின்ராஜ், யுவராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட கழக செயலாளர். க.சுந்தர், எம்.எல்.ன.. தீர்மானங்களை விளக்கிபேசினார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பவன விழா பொதுக் கூட்டத்தை கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கும் விதத்தில் காஞ்சிபுரத்தில் நடத்துவதற்கு வாய்ப்பு வழங்கிய ஆருயிர் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

பவள விழா பொது கூட்டம் முடிந்த சில நிமிடங்களில் தமிழ்நாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என்ற அறிவிப்பை வெளியிட்டு அனைவரையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தியதற்கும் நம்முடைய தலைவர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக கழகம் தெரிவித்துக்கொள்கிறது. துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் வணங்கி வாழ்த்துகிறது.

காஞ்சிபுரத்தில் பிரம்மாண்டமாய் நடந்த பவள விழா பொதுக்கூட்டத்தில், கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்த தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும், தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும் அதைப்போலவே கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க தமிழ்நாடு முதலமைச்சர் துணை முதலமைச்சர். கூட்டணி கட்சித் தலைவர்கள் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., மறுமலர்ச்சி திமுக தலைவர் வைகோ எம்.பி., மார்க்யூஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இரா.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மைதீன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி., மனிதநேய மக்கள் கட்சி பேராசிரியர் எம்.எஸ். ஜவருல்லா எம்.எல்.ஏ., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., தோழமை கட்சி தலைவர் பொன்.குமார், எர்ணாவூர் நாராயணன், முருகவேல் ராஜன் எம்.எல்.ஏ., தமீமுன் அன்சாரி, கருணாஸ், அதியமான், திருப்பூர் அல்தாப், பி.என்.அம்மாவாசி, அமைச்சர் பெருமக்கள், மாவட்ட செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர் நகர ஒன்றிய பேரூர், பகுதி வார்டு கிளை நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பித்தமைக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

அக்டோபர் 29 முதல் நவம்பர் 28 வரை புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்யும் பணிகளை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிகளில் ஒன்றுவிட்ட சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் சிறப்பு முகாம்களிலும் பங்கேற்று வாக்காளர் சேர்க்க பணியை சிறப்பாக செய்திட கோருகிறேன்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக்டோபர் 2ம் நாள் மகாத்மா காந்தியடிகளின் 156வது பிறந்த தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம் வரதராஜபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று கிராம மக்களுடன் கலந்துரையாடினர். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன்,மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், ஊராட்சி மன்றத் தலைவர் செல்வமணி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் வருகை தந்த உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டம் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத் தம்மையார் நினைவிடம் ஆகியவற்றிற்கு சென்று முத்தமிழ் அறிஞர் கலைஞர், தாயார் அஞ்சுகத்தம்மையார் ஆகியோர் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை. த.சோழராஜன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்தராபதி, ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், ஆர்.பாலச்சந்திரன்,சேகர் கலிய பெருமாள், புலிவலம் தேவா, நகர்மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், சோம. செந்தமிழ் செல்வன், பாத்திமா பஷீரா, நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர் .